# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2140/17 - 2019 සැප්තැම්බර් මස 10 වැනි අඟහරුවාදා - 2019.09.10

*2140/17 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 3/2012* III.

**2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டம்**

*2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (3) ஆம், (6) ஆம், (7) ஆம் உட்பிரிவுகளுடனும் 50 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடனும் சேர்த்துவாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 69 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் மதியுரையின்மீது, சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ஜோன் அந்தோனி இமானுவேல் அமரதுங்க,
சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி, வனஜீவராசிகள்
மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2019, செத்தெம்பர் 04.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணி (வழிகாட்டுதற் சேவைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2. (1)* ஆளெவரும், சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் என்ற சேவையை, அத்தகைய சேவை (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையிடம் இதற்கான ஒழுங்குவிதி 2 (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் என்ற இயைபான வகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டு அத்தகைய சேவைக்காக அதிகாரசபையிடமிருந்து உரிமமொன்று பெறப்பட்டாலொழிய, அத்தகைய சேவையைக் கொண்டுநடாத்துதலாகாது.

1A - G 30945 — 27 (2019/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) எல்லாச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர்களும், புரிவதற்கு அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படும் சேவைகளின் அடிப்படையில் பின்வருமாறு நான்கு வகுதியினராகப் பதவிப்பெயர் குறிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) தேசியச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் ;

(ஆ) சாரதிச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் ;

(இ) பிரதேசச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் ;

(ஈ) அமைவிடச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர்.

(3) சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் ஒவ்வொருவரும், ஏற்புடையற்பாலவாறு இதற்கான அட்டவணை I மற்றும் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த தேவைப்பாடுகளையும் தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

பாகம் I

**சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர்களைப் பதிவு செய்தலும் அவர்களுக்கு உரிமமளித்தலும்**

3. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளரொருவர் என்ற சேவையொன்றைக் கொண்டுநடாத்த விரும்புகின்ற ஆளொவ்வொருவரும், -

(அ) (இதனகத்துப்பின்னர் ''பணிப்பாளர் தலைமையதிபதி'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவங்களில் பதிவுசெய்வதற்கான மற்றும் உரிமமளிப்பதற்கான தனிவேறான விண்ணப்பங்களை அவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்;

(ஆ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், 2018, மே 16 ஆந் திகதிய 2071/57 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய கட்டணங்களை விண்ணப்பத்துடன் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும் ;

(இ) சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளரொருவராகப் பணியாற்றுவதற்கு விண்ணப்பக்காரர் உள மற்றும் உடல் ரீதியாகத் தகுதியுடையவராக உள்ளார் எனப் பதிவு செய்யப்பட்ட அரசாங்க மருத்துவ அலுவலரொருவரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான மருத்துவச் சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் ;

(ஈ) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம், இலங்கைத் தேசியச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர்கள் நிறுவகம் அல்லது அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறேதேனும் பயிற்சி நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட ஆண்டுக்கு ஆகக்குறைந்தது 32 மணித்தியாலயங்களிலான சுற்றுலாப்பயணி வழிகாட்டுதலுடன் தொடர்புபட்ட பயிற்சி மற்றும் திறமைகள் அபிவிருத்தியின் வெற்றிகரமான பூர்த்திசெய்கையின் செல்லுபடியான எண்பிப்பொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(உ) குற்றத்தீர்ப்பளிக்கப்படாமைபற்றிய பொலிஸ் சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய விண்ணப்பத்தை முடிவு செய்யும் நோக்கத்துக்காக அவசியமென அவர் கருதக்கூடிய ஏதேனும் தெளிவுபடுத்துதலுட்பட, மேலதிகத் தகவல்கள் அல்லது ஆவணங்கள் கொடுத்துதவப்படவேண்டுமெனக் கோரலாம்.

5. பொய்யான, பிழைவழியுய்க்கும் அல்லது பிழையான தகவல்களை அல்லது விபரங்களைக் கொண்டுள்ளதாகக் காணப்படும் விண்ணப்பமொன்று நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

6. விண்ணப்பகாரர் தோதானவாறு இதற்கான அட்டவணை I மற்றும் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த தேவைப்பாடுகளையும் தகைமைகளையும் கொண்டுள்ளாரெனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படுமிடத்து, அவர் அத்தகைய விண்ணப்பதாரரைப் பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளரொருவராகப் பதிவு செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரருக்கு உரிமமளிக்க முற்படுதலும் வேண்டும்.

7. பதிவு செய்யப்பட்ட சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளரிடமிருந்து உரிமமொன்றின் வழங்கலுக்கென விண்ணப்பமொன்று பெறப்பட்டதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி உரிமத்தின் வழங்குகைக்காக, குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் விண்ணப்பம் தொடர்பான அத்தகைய மேலதிகத் தகவல்களை, ஆவணங்களை அல்லது தெளிவுபடுத்துதல்களைக் கொடுத்துதவும்படி விண்ணப்பதாரரைப் பணிக்கலாம்.

8. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, தோதானவாறு இதற்கான அட்டவணை I மற்றும் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தேவைப்பாடுகள் மற்றும் தகைமைகளை விண்ணப்பதாரர் கொண்டுள்ளாரெனத் திருப்திப்படுவதன் மீது, சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளரொருவராகச் சேவையாற்றுவதற்கு அத்தகைய விண்ணப்பதாரருக்கு உரிமமொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, ஒருமாத காலப்பகுதியினுள் அவரது முடிவை எழுத்தில் விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், உரிமத்தை வழங்க மறுக்கும் விடயத்தில் அதற்கான காரணங்களை அவர் குறித்துரைத்தலும் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட உரிமம்,-

(அ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு முறையாக இணங்கியொழுகுகையை உறுதிப்படுத்துவதற்காகத் தோதானவையெனப் பணிப்பாளர் தலைமையதிபதி கருதக்கூடியவையும் உரிமத்திற் குறித்துரைக்கப்பட்ட வாறானவையுமான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாகவிருக்கலாம் ;

(ஆ) அதன்கண் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று வலுவுக்குவருதல் வேண்டும் ; அத்துடன்

(இ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அது முன்னரே இல்லாதாக்கப்பட்டாலொழிய அல்லது இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

## பாகம் II

## பொதுவான ஏற்பாடுகள்

10. சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளராக அவரது பணிகளை புரிவதில், ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் எந்தப் பணிக்காக அத்தகைய உரிமம் வழங்கப்படுகின்றதோ அந்தப் பணி தவிர்ந்த வேறு ஏதேனும் பணியைக் கொண்டு நடாத்துதலாகாது.

11. பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபையின் அங்கீகாரத்தின்மீது, இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்துடன் இணைந்துள்ள ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையைத் திருத்தலாம், திரிபுபடுத்தலாம் அல்லது ஒழிக்கலாம்.

12. பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வரும் ஏதுக்களின்மீது, இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குதல் வேண்டும் :-

(அ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு மீறப்பட்டுள்ளமை;

(ஆ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி மீறப்பட்டுள்ளமை ; அல்லது

(இ) இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்துடன் இணைந்துள்ள ஏதேனும் நிபந்தனை இணங்கியொழுகப்பட்டிராமை.

13. இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று,-

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானவொரு படிவத்தில் அவருக்கு அதற்கென விண்ணப்பமொன்று செய்யப்படுவதன்மீது ;

(ஆ) உரிமம் முடிவுறுவதற்கு முன்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் ; அத்துடன்

(இ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 2018, மே 16 ஆந் திகதிய 2071/57 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையின் நியதிகளின்படி செலுத்தப்படற்பாலவாறான அத்தகைய கட்டணங்களின் கொடுப்பனவின் மீது,

புதுப்பிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

14. உரிமமொன்றை வழங்க மறுக்கின்ற அல்லது வழங்கப்பட்ட உரிமமொன்றைப் புதுப்பிக்க மறுக்கின்ற அல்லது இல்லாதாக்குகின்ற முடிவொன்றினால் இன்னலுறும் எவரேனுமாள், விடயத்துக்கேற்ப, மறுப்பு அல்லது இல்லாதாக்குகை பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்ற எழுத்திலான தொடர்பாடல் பெறப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள், 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப்பயணத்துறைச் சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நியாயசபைக்கு மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

15. பணிப்பாளர் தலைமையதிபதி, சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் சேவைகள் பற்றிய இடாப்பொன்று பேணப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், அது பதிவு செய்யப்பட்ட மற்றும் உரிமமளிக்கப்பட்ட சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் சேவைபற்றிய அத்தகைய விபரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பேணப்படுதலும் வேண்டும்.

16. அரிதான மொழிகளில் தேர்ச்சியுள்ளவர்களுக்கு முந்துரிமை கொடுக்கும் நோக்கத்திற்காக, அதிகாரசபையானது, சந்தைக் கோரிக்கையைக் கவனத்திற்கொண்டு அரிதான மொழிகளை முடிவு செய்தல் வேண்டும்.

பாகம் III

**சேவைகளின் நியதிகளும் நிபந்தனைகளும்**

17. அதிகாரசபையானது உரிமமளிக்கப்பட்ட சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் ஒவ்வொருவருக்கும் செல்லுபடியான அடையாள அட்டையொன்றை வழங்குதல் வேண்டும்.

18. உரிமமளிக்கப்பட்ட சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் ஒவ்வொருவரும் கடமையிலுள்ளபோது அதிகாரசபையினால் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமமொன்றைக் கொண்டு செல்லுதல் வேண்டும்.

19. தேசியச் சுற்றலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் அல்லது சாரதிச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர், சுற்றுலாப்பயணம் பூராகவும் எந்தச் சுற்றுலாப்பயணிக் குழுவுடன் அவர் இணைந்துள்ளாரோ அதனுடன் தங்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் அவ் ஹோட்டல் சுற்றுலாப்பயணிக் குழுவுக்கு வழங்கப்பட்டவாறாக அதையொத்த உறைவிட வசதிகளை தேசிய சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளருக்கு வழங்குதல் வேண்டும்.

20. இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் திகதியன்று சுற்றுலாப்பயணி வழிகாட்டுநரொருவர் என்ற சேவையை ஏற்கனவே கொண்டுநடாத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும் இவ்வொழுங்குவிதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதியினுள் அதிகாரசபையிடம் பதிவு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

21. இவ்வொழுங்குவிதிகளில், -

"பிரதேசச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர்" என்பது, பிரதேசச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளராக முறையாகப் பதிவு செய்யப்பட்டவரும் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட பிரதேசத்தினுள்/பிரதேசங்களினுள் அத்துடன் ஏழுக்கு மேற்படாத பயணிகளுக்கான ஆசனக் கொள்ளளவைக் கொண்டவொரு வாகனத்துடன் மட்டுமே சுற்றுலாப்பயணி வழிகாட்டுநராகத் தொழில்புரிவதற்கு இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையினால் அதன்மூலம் அதிகாரமளிக்கப்பட்டவருமான ஓராள் என்று பொருளாகும் ;

"சாரதிச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர்" என்பது, சாரதிச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநராக முறையாகப் பதிவு செய்யப்பட்டவரும் ஏழுக்கு மேற்பட்ட பயணிகளுக்கான ஆசனக் கொள்ளளவைக் கொண்டவொரு வாகனத்துடன் இலங்கையில் எப்பாகத்திலும் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநராகத் தொழில்புரிவதற்கு இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையினால் அதன்மூலம் அதிகாரமளிக்கப்பட்டவருமான ஓராள் என்று பொருளாகும் ;

*"தேசியச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர்" என்பது, தேசியச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநராக முறையாகப் பதிவு செய்யப்பட்டவரும் தேசியச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநராக இலங்கையில் எப்பாகத்திலும் தொழில்புரிவதற்கு அதன்மூலம் அதிகாரமளிக்கப்பட்டவருமான ஓராள் என்று பொருளாகும் ;*

*"அமைவிடச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர்" என்பது, அமைவிடச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநராக முறையாகப் பதிவு செய்யப்பட்டவரும் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட அமைவிடத்தினுள்/அமைவிடங்களினுள் மட்டுமே அமைவிடச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநராகத் தொழில்புரிவதற்கு இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகார சபையினால் அதன்மூலம் அதிகாரமளிக்கப்பட்டவருமான ஓராள் என்று பொருளாகும் ;*

*"சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர்" என்பது, ஒரு தேசியச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளராக, சாரதிச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளராக, பிரதேசச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளராக ; அல்லது அமைவிடச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளராகச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் சேவைகளை வழங்குகின்ற அல்லது புரிகின்ற எவரேனுமாள் என்று பொருளாகும் ; அத்துடன்*

*"சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் சேவை" என்பது, சுற்றுலாப்பயணிகளைக் கூட்டிச்சென்று சுற்றுலாப்பயணிகள் அக்கறையை ஈர்க்கக்கூடிய இலங்கையிலுள்ள எல்லா அம்சங்கள் சம்பந்தமாகவும் அவர்களுக்குத் தகவல்களையும் எடுத்துரைத்தல்களையும் அளிப்பதன்மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு சேவை என்று பொருளாகும்.*

*அட்டவணை* I

*ஒழுங்குவிதிகள் 6 மற்றும் 8*

**சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் என்ற சேவைக்காகப் பதிவு செய்யப்படுவதற்குக் குறைந்தபட்சத் தேவைப்பாடுகள்**

1. *விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாவிருத்தல் வேண்டும்.*

2. *விண்ணப்பதாரரின் வயது, விண்ணப்பம் முடிவடையும் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 60 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

3. *விண்ணப்பதாரர் ஆங்கிலத்தில் அல்லது வேறு அந்நியநாட்டு மொழியில்/மொழிகளில் தேர்ச்சிபெற்றவராக இருத்தல் வேண்டும்.*

4. *எல்லா வகுதியினருமான சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர்களுக்காக, வரலாறு, புவியியல், சமூகவியல், புராதனப்பொருளியல், தாவரவியல், விலங்கியல், கமத்தொழில், சர்வதேசத் தொடர்புகள் என்ற பாடங்களில் அல்லது சுற்றுலாப்பயணத்துறைக்கு இயைபான வேறேதேனும் பாடத்தில் பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட பட்டமொன்றைக் கொண்டுள்ளோருக்கு முந்துரிமை கொடுக்கப்படுதல் வேண்டும்.*

5. *தகுதிவாய்ந்த அரசாங்க மருத்துவ அலுவலரினால் வழங்கப்பட்டதும், சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் என்ற சேவைகளை நிறைவேற்றுவதற்கானதுமான உள மற்றும் உடல் தகுதிச் சான்றிதழொன்றை விண்ணப்பதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.*

6. *விண்ணப்பதாரர், ஏதேனும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படாமை பற்றிய பொலிஸ் சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

7. *தெரிவானது, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு தெரிவுப் பரீட்சையிலும் நேர்காணலிலும் மற்றும் மொழித்தகுதிப் பரீட்சையிலுமான புரிகையின் அடிப்படையின் மீதாதல் வேண்டும்.*

## அட்டவணை II

*ஒழுங்குவிதிகள் 2,6 மற்றும் 8*

**பின்வரும் வகுதிகளுக்கான ஆகக்குறைந்த தகைமைகள் :**

1. (ஆங்கிலம் பேசுகின்ற) தேசியச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் –

(அ) ஆங்கிலம் என்ற பாடத்திற்கான திறமைச் சித்தியுடன் ஆகக்குறைந்தது இரு தடவைகளிலேனும் எல்லாப் பாடங்களிலும் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் தேறியிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) இலங்கைச் சுற்றுலாப்பயணி மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட தேசியச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) இலங்கைச் சுற்றுலாப்பயணி மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. தேசியச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர் (ஆங்கிலம் தவிர்ந்த மொழிகள்),–

(அ) ஆகக்குறைந்தது இருதடவைகளிலேனும் எல்லாப் பாடங்களிலும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தேறியிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(இ) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் குறித்துரைக்கப்பட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டதும், எந்த மொழியில் அவர் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநராகத் தொழில்புரிவதற்கு உட்கருதுகின்றாரோ அந்த மொழியிலானதுமான தேர்ச்சிச் சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) சொல்லப்பட்ட மொழியானது சுதேச மொழியாகவுள்ளவொரு நாட்டில் ஆகக்குறைந்தது ஐந்தாண்டுகளுக்கேனும் வசித்து பணிபுரிந்தமை பற்றிய நம்பிக்கைச் சான்றுகளைக் காண்பிப்பதன்மூலம் மொழித் தேர்ச்சியையும், இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டவொரு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட மொழித்தகுதிப் பரீட்சையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தமையையும் எண்பித்தல் வேண்டும் ;

(உ) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட தேசியச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர்கள் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; அத்துடன் இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. சாரதி சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர், –

(அ) ஆகக்குறைந்தது இருதடவைகளிலேனும் ஆறு பாடங்களுடன் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் தேறியிருத்தல் வேண்டும் ;

(ஆ) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட சாரதிச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(இ) ஏழு பயணிகளுக்கான ஆசனக் கொள்ளளவுடனான வாகனமொன்றைச் செலுத்துவதில் ஆகக்குறைந்தது ஐந்தாண்டுகளைக்கொண்ட அனுபவத்துடனேனும், அத்தகையவொரு வாகனத்தைச் செலுத்துவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையிடம் இடையீடில்லாத ஐந்தாண்டுகால நற்சேவைப் பதிவேட்டுடனான பிரதேசச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநராக உள்ள எவரேனுமாள் பதிவு செய்யப்பட்ட சாரதிச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநராகவிருப்பதற்கு விண்ணப்பிக்கலாம்.

4. பிரதேசச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர், -

(அ) ஆகக்குறைந்தது இருதடவைகளிலேனும் நான்கு பாடங்களுடன் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் தேறியிருத்தல் வேண்டும் ;

(ஆ) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பிரதேசச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; அல்லது

(இ) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்நோக்கத்துக்காக முறையாக ஏற்றங்கீகரிக்கப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட வேறேதேனும் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட பிரதேசம் எம்மாகாணத்தில் அமைந்துள்ளதோ அம்மாகாணத்தில் நிரந்தரமாக வதிபராக இருத்தல் வேண்டும்.

5. அமைவிடச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் விரிவுரையாளர், -

(அ) ஆகக்குறைந்தது இருதடவைகளிலேனும் நான்கு பாடங்களுடன் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் தேறியிருத்தல் வேண்டும் ;

(ஆ) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட அமைவிடச் சுற்றுலாப்பயணி வழிகாட்டுநர் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; அல்லது

(இ) இலங்கைச் சுற்றுலாப்பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்நோக்கத்துக்காக முறையாக ஏற்றங்கீகரிக்கப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட வேறேதேனும் பயிற்சியை வெற்றிகரகமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*2019.04.08*

*9-798*